**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.205/2019** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பழனி | **வயது** | : | 79 |
| **த.பெ** | : | துளசி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | களம்பூர் | **தொழில்** | : | ராணுவ பணி ஓய்வு |

**11.09.2025 – வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்து விவரங்களும் உண்மை.

**கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.**

1) பட்டா எண் 1309 க்கான என் தந்தை மற்றும் விஸ்வநாதன் பேரில் வழங்கப்பட்ட கூட்டு பட்டா புத்தகம் அசல் **வா.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 15.09.1981 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 21.05.1983 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 07.06.1984 தேதியிட்ட நான் நடராஜன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற அசல் கிரையபத்திரம் **வா.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 14.10.2004 தேதியிட்ட கிரையபத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 09.11.2010 தேதியிட்ட என்பேரிலும், கோவிந்தசாமி மகன் பழனி பேரிலும் வழங்கப்பட்ட கூட்டுபட்டா பட்டா எண் 870 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.ஆ.1, 4 மற்றும் 6 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.B.Salma,
District Munsif,
Polur.